**<u>குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.II</u>**
**<u>இராமநாதபுரம்.</u>**

**முன்னிலை :** திரு. A. ஆதியான். B.A., B.L.,
நீதித்துறை நடுவர் எண்.II
இராமநாதபுரம்.

2026 ஆம் ஆண்டு மே மாதம் 29-ம் நாள் வெள்ளிக்கிழமை

**<u>Crl. M. P. No.455/2026</u>**

**<u>CNR NO. TNRM 02-001324-2026</u>**

மகேந்திரன், (வயது 31)
த/பெ. சூர்யமூர்த்தி,
சிவன்கோவில் தெரு,
செட்டிய தெரு,
இராமநாதபுரம் . . . மனுதாரர்

// எதிர் //

காவல்நிலைய பொறுப்பு அதிகாரி,
கேணிக்கரை காவல் நிலையம், . . எதிர்மனுதாரர்

---

கேணிக்கரை காவல் நிலைய குற்ற எண். 368/2025, பிரிவு 304(2) BNS
வழக்கு சொத்தான சுமார் 6.580 கிராம் எடையுள்ள அறுந்த நிலை கொண்ட தங்க செயின் ஒன்று.

---

இம்மனுவானது கடந்த 04.05.2026ம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு, கடந்த 20.05.2026ம் தேதியன்று விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/நிகழ்நிலை புகார்தாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. R..பாபு அவர்கள் ஆஜராகியும், அரசு தரப்பில் அரசு வழக்கறிஞர் நிலை – 2 அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களைக் கேட்டும் வழக்கு ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும் ....

**<u>உத்தரவு</u>**

01) இம்மனுவானது மனுதாரர்/நிகழ்நிலை புகார்தாரர் தரப்பில், வழக்கு சொத்தான சுமார் 6.580 கிராம் எடையுள்ள அறுந்த நிலை கொண்ட தங்க செயினை தற்காலிகமாக தன்னிடம் ஒப்படைக்குமாறு வேண்டி 497 r/w 503 BNS பிரிவின் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

A AATHIYAN Digitally signed by A AATHIYAN Date: 2026.05.29 19:41:06 +0530

02) மனுதாரர்/நிகழ்நிலை புகார்தாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதுரையில் நிகழ்நிலை புகார்தாரர் கழுத்தில் அணிந்திருந்த தங்க செயினை திருடப்பட்டதாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, எதிரி கைது செய்யப்பட்டுள்ளார், எதிரி தனது ஒப்புதல் வாக்குமூலத்தில் நிகழ்நிலை புகார்தாரர் அணிந்திருந்த தங்க செயினை திருடியதாக ஒப்புக்கொண்டுள்ளார். எனவே மனு சொத்தானது நிகழ்நிலை புகார்தாரரின் குடும்பத்தினருக்கு பாத்தியப்பட்டது என்பது நிரூபணமாகிறது. எனவே மனுச்சொத்தை தற்காலிகமாக நிகழ்நிலை புகார்தாரர் வசம் ஒப்படைக்குமாறு வாதிட்டார்.

03) இம்மனுவில் எதிர்மனுதாரர்/அரசுதரப்பிற்கு அறிவிப்பு அனுப்பப்பட்டு, பதில் பெறப்பட்டது. இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட வழக்குச் சொத்து மனுதாரருக்கு சொந்தமானது என்பதால், வழக்கு சொத்துக்களை மனுதாரருக்கு வழங்குவதில் எவ்வித ஆட்சேபணையும் இல்லை என எதிர் மனுதாரர் தரப்பில் பதில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

04). இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள்பரிசீலனை செய்யப்பட்டன. வழக்கு சொத்து தனக்கு பாத்தியப்பட்டது என்று மனுதாரரை தவிர வேறு எவரும் உரிமை கோரி மனுக்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. எதிர்மனுதாரர் தரப்பிலும் மேற்படி சொத்தான தங்க செயின் மனுதாரருக்கு சொந்தமானது என்று தான் பதிலுரை தாக்கல் செய்துள்ளனர்.

05) குற்ற வழக்கில் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்தானது யாருக்கு பாதியப்பட்டது என்பதை அறிய எதிரியிடமிருந்து பெறப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை பரிசீலனை செய்வது ஏற்புடையது. இதுதொடர்பாக மாண்புமிகு மெட்ராஸ் உயர்நீதிமன்றம் B. Loganathan / vs / The Inspector of Police Lalapettai P.s. (Crl.R.C. (MD). No's. 212 to 216 of 2016) என்ற வழக்கில்

> "16. In property offences, problem arises when the accused converts the case– property into a dirrerent form. Sometemes, the accused convert the jewel items into ingots for his convenient sake, easy handling and for easy disposal. But, even in such cases, when the ownership of the case

A AATHIYAN
Digitally signed by A AATHIYAN
Date: 2026.05.29 19:41:13 +0530

propeties could be traced to the defacto complainant, he can be given the custody of the same prescribing certain reasonable conditions.

17. Though confession given by the accused to the Investigation Officer during investigation cannot be used to convict him except to the extent covered under Section 27 of the Evidence Act, namely, " so much information " leading to the "discovery of a fact", however, for other purposes, such as deciding the owner of the case property for question of semblance, even for the benefit of the accused, information in confessional statement can be referred to." என்று தீர்ப்பளித்துள்ளது .

பரிசீலனைக்குட்பட்ட இவ்வழக்கில் வழக்கு சொத்து மனுதாரர்/நிகழ்நிலை புகார்தாரரிடம் திருடியதாக எதிரி குற்ற ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்துள்ளனர், அதன் அடிப்படையில் வழக்கு சொத்து கைப்பற்றப்பட்டுள்ளது. அதன்படி வழக்கு சொத்து நிகழ்நிலை புகார்தாரருக்கு பாத்தியப்பட்டது என்பது தெரியவருகிறது.

06) எனவே மேற்கண்ட வழக்கு சொத்து தங்கம் என்பதால் அவை மனுதாரரின் பயன்பாட்டிற்கு அவசியமானது என்பதாலும், மனுதாரரின் தற்போதைய வாழ்க்கை நிலை மற்றும் பொருளாதார நிலை ஆகியவற்றையும் கருத்தில்கொண்டும் மற்றும் இவ்வழக்கின் தன்மை மற்றும் சூழ்நிலைகளை பரிசீலனை செய்கையில், சுமார் 6.580 கிராம் எடையுள்ள அறுந்த நிலை கொண்ட தங்க செயினை தற்காலிகமாக மனுதாரரிடம் ஒப்படைவு செய்ய கோரும் இம்மனுவானது நீதியின் பால் அனுமதிக்கத்தக்கது என்று முடிவு செய்து, மனுதாரரின் மனு கீழ்கண்ட நிபந்தனைகளின்பேரில் அனுமதிக்கப்பட்டு, மனுச்சொத்தை தற்காலிகமாக மனுதாரரிடம் ஒப்படைக்க உத்தரவிடப்படுகிறது.

**<u>நிபந்தனைகள்</u>**

i) மனுதாரர்/ நிகழ்நிலை புகார்தாரர் தனக்காகவும், அவரது தரப்பில் இரு நபர்கள் ஜாமீன்தாரர்களுடன் ரூபாய் 1,00,000/- (ஒரு இலட்சம் மட்டும்) க்கு பிணைபத்திரம் எழுதி கொடுக்க வேண்டும்.

A AATHIYAN Digitally signed by A AATHIYAN Date: 2026.05.29 19:41:24 +0530

ii) காவல்துறையினர் வழக்கு சொத்தை நீதிமன்றத்தில் 7 நாட்களுக்குள் ஒப்படைக்க வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.

iii) வழக்கு முடியும் வரை வழக்கு சொத்தை மாற்றவோ, விற்கவோ, அழிக்கவோ கூடாது.

iv) நீதிமன்றம் உத்தரவிடும்போது வழக்கு சொத்தை நீதிமன்றத்தில் ஒப்படைக்கிறேன் என மனுதாரர் உண்மை உறுதி ஆவண பத்திரம் எழுதிக்கொடுக்க வேண்டும்.

v) வழக்கு சொத்தை புகைப்படம் எடுத்து அந்த புகைப்படத்தின் மீது மனுதாரர் கையொப்பம் இட்டும், அந்த புகைப்படத்தின் C.D யினையும், இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 65(பி)ன் கீழான சான்றிதழுடன் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவேண்டும்.

vi) மனுதாரர்/நிகழ்நிலை புகார்தாரரின் ஆதார் அட்டையின் நகலில் சுயசான்றொப்பமிட்டு இந்நீதிமன்றத்தில் ஒப்படைக்கவேண்டும்.

vii) குற்றவியல் நடைமுறைச்சட்டத்தின்படி பஞ்சநாமா தயார் செய்ய வேண்டும்.

இந்த உத்தரவு என்னால் சொல்லப்பட்டு அவரால் கனிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு 2026–ம் ஆண்டு மே மாதம் 29–ம் நாள் வெள்ளிக்கிழமையாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

A AATHIYAN Digitally signed by A AATHIYAN Date: 2026.05.29 19:41:46 +0530

நீதித்துறை நடுவர் எண். II,
இராமநாதபுரம்.